2025 ஆகஸ்ட்  மாதம் 19 – ஆம் தேதி செவ்வாய்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

O.S. நெம்பர் : 58 /2016

2025–ஆம் ஆண்டு  ஆகஸ்ட் மாதம் 19 – ஆம் தேதி செவ்வாய்கிழமை 1, 2, 4, 5 பிரதிவாதிகள்  தரப்பு சாட்சியாகிய  பி.வா.சா.3–வது நபரின் வாக்குமூலம்

(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.T.சுபத்ரா, கிரேடு I பென்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | சரோஜா |
| கணவர் பெயர்: | சுபாஷ் |
| ஊர்: | பவழநகர் |
| வட்டம்: | நெல்லித்தோப்பு |
| மாவட்டம்: | பாண்டிச்சேரி |
| தொழில்: | இல்லத்தரசி |
| வயது : | 65 |

19.08.2025

**(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).**
**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**முதல் விசாரணை**–

நான் இந்த வழக்கில் 1, 2, 4, 5 பிரதிவாதிகள் தரப்பு கூடுதல் சாட்சியாவேன்.  மேலும் இந்த வழக்கின் 2ம் பிரதிவாதி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம்  செய்துள்ளேன். அதை 1, 2, 4, 5 பிரதிவாதிகள் தரப்பு  சாட்சியமாக ஏற்க வேண்டுகின்றேன்.  எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை  தாக்கல் செய்கிறேன் அவற்றை 1, 2, 4, 5 பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்களாக ஏற்றுக்கொள்ள வேண்டி பிரார்த்திக்கிறேன்.

| | |
|---|---|
| 1. | 4ம் பிரதிவாதி தேனி, நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த கு.வி.மு.ச. பிரிவு 156(3) ன்கீழ் தாக்கல் செய்த மனுவில் கைநகல் **பி.வா.சா.ஆ.7** |
| 2. | 16.08.2024ம் தேதியிட்டு தேனி நீதித்துறை நடுவர் நீதிமன்றம் Crm.P.No.5714/2024 மனுவில் பிறப்பித்த உத்தரவு இணையதள நகல் **பி.வா.சா.ஆ.8** |
| 3. | 02.11.2024ம் தேதியிட்டு பி.சி.பட்டி காவல் நிலைய குற்ற எண்.445/2024ன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் கணினி நகல் **பி.வா.சா.ஆ.9** |

வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டி பிரார்த்திக்கிறேன்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**:– வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 19.08.2025 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR
Digitally signed by SANKAR
Date: 2025.08.19 18:31:47 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
19.08.2025.